'Agathiyar Kuzhambu' (Source- Agasthiyar Amutha Kalai Gnanam) A drug containing purified inorganics like mercury, red orpiment, yellow orpiment, dehydrated borax, rock salt, and herbal drugs like aconite, croton seeds asefoetida, black mustard, ajowan, black cumin and castor oil is indicated as topical application in mammary cancer

'Kaantha chendooram' (Source- Agasthiyar paripooranam 400) A drug containing purified lode stone, sulphur, lead wort powder processed with eclipta juice, lime

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

juice, milk, egg albumin, madder latex is indicated in Abdominal tumor

'Poorna chandroodayam' (Source-Theriyar Karisal 300) A drug containing Gold filling, Mercury, Sulphur processed with red cotton flower juice and banana rhizome juice is indicated in cancerous ulcers.

Mahaavallaathi (Source - Bogar Vaithyam 700 and Vallathi 600) A drug containing all herbal ingredients milk, ghee and honey- china root, emblic and belleric myrobalan, dry ginger, lesser galangal, Indian spikenard, cinnamon bark, picrorrhiza, telichery seeds, shiva's neem, black musale, nutmeg, c;loves, cinnamon leaves, black pepper, cardamom, ajowan, long pepper, psoralea, coriander seeds, embelia, nigella, leadwort root, celestrus, withania, saffron, korochan, purified marking nut, brown sugar, is indicated in cancer.

Kowsiker kuzhambu (Source Kowsika muni nool) Chebulic myrobalans, black mustard, rock salt, asafoetida, dehydrated borax, purified mercury, purified red orpiment, long pepper, purified yellow orpiment, cumin, picrorrhiza, purified aconite, purified croton seed kernel, carbonized coconut shell, palm jiggery, daemia leaf juice, coconut milk is indicated in cancer with daemia juice

Rasakanthi mezhugu (Source-Pulippani vaidhyam 500) Purified mercury, purified sulphur, calomel, yellow orpiment, lode stone, blue vitriol, calamine, litharge, dry ginger, ajowan, turmeric, embelia, sweet flag, clove, china root, purified marking nuts, chebulic myrobalan, nigella seeds, wild cumin, beetle killer, yew leaf, raisins, long pepper, lesser galangal, costus, celastrus, fennel, cardamom, nutmeg, black pepper, cumin, psoralea, oak grass, long pepper root, rattan cane root, purified nux vomica, purified nux potatorum, astercantha seeds, sesame seed, horse gram, copra, acalypha fruticosa root, azima root, withania, corallocarpus root, lead wort root, eggs, palm jaggery is indicated for cancers and cancerous ulcers.

Some drugs like Chandamarutha chedooram, Idivallathy Mezhugu, Serankottai Nei, which are used by healers do not have a direct reference for treatment of cancer in the texts

TREATMENT SEEKING PATTERN

Centre for Traditional Medicine & Research receives cancer patients at different stages. Difficulty in swallowing, abnormal bleeding, loss of appetite, weight loss, low grade fever, fatigue, altered bowel habits and pain are some of the features with which patients present themselves. Most of the patients come to us with diagnosis from cancer hospitals.

Detailed interactions with the patients reveal increasing number of patients seek remedy from practitioners of Traditional medicines for the following reasons.

1). Most cases are diagnosed very late after metastasis has occurred and the general health of the patient does not permit complete surgical removal as the disease has spread to multiple locations. In spite of removal in rest of the cases where the lesion is localized the possibility of microscopic metastasis cannot be ruled out. 2). The serious side effect of

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

chemotherapy like severe vomiting, diarrhea makes the patient does not continue the treatment for its suggested full course. 3). The possibility of chemotherapy and radiotherapy destroying the normal cells apart from the cancer cells due their cytotoxic effects. 4). Target chemotherapy and monoclonal antibodies therapies are not widely available. 5). The absence of specific cancer treatment hospitals even in many district head quarters is yet another hurdle. 6). Without health insurance, the cost of treatment is prohibitive for most people and they are ill affordable to a vast majority.

Above all there is a trust that the traditional medicine, particularly Siddha can cure cancer is very strong among people.

The following are the different categories of patients who seek treatment at CTMR.

- Patients in advanced stage where all other options of chemotherapy, surgery and radiotherapy are not possible,
- Patients not willing to undergo the orthodox method but wants to be treated with Siddha medicine
- Patients who want supportive therapy-supplementation alongside conventional treatment and
- the last set of patients who have undergone treatment including surgery but want to prevent reoccurrence or with late secondaries.

PALLATIVE CARE:-

The basis of treatment at CTMR is palliative care. Since vast majority come at advanced stages the realistic option is palliative care aimed at improving the quality of life of the patient and their immediate family by providing pain relief, psychological support and administration of specific plant based drugs for which enough evidence are available in classical texts and also evaluated by scientific methods both in-vitro and in-vivo.

The first step in the care is proper counseling to the patient and the attendants on the nature of the condition, the likely prognosis and need for following the suggestions on dietary recommendations, lifestyle modification, abstaining from causative substances like tobacco, alcohol and adation of *Kayakalpa* methods including breathing exercise, meditation etc. The dietary recommendation is generally rich in fruits and vegetable salads- baked vegetables rather than deep fried once. Significant reduction in intake of meat products, avoidance of oily, fat rich deep fried spicy pungent diet is also suggested. Depending upon the patient's ability to sallow porridge, fruit juices, soups are suggested.

Then the administration of drugs. The preferred drug of choice in most types of cancer is Mahavallathy Among the different drugs listed in Siddha this drug is free from inorganic and contains powerful anti-oxidants like Amla, long pepper etc, appetite enhancers like black pepper, clove, cinnamon bark etc. cytotoxics like leadwort and marking nut. As supportive therapy all patients are provided with a blend of turmeric and Indian gooseberry

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வியக்க வைக்கும் விண்ணோர் மருந்து

Dr.S.மாணிக்க ராஜா BSMS

சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் என்று விண்ணியல் ஆராய்ச்சிக்கு வித்திட்ட பாரதி பிறந்த மண்ணின் மருத்துவமாம் தமிழ் மருத்துவத்தில் - சித்த மருத்துவத்தில் தங்கத்திற்கு நிகரான விண்ணோர் மருந்தின் மகத்துவத்தினை விளக்கும் நோக்கில் இக்கட்டுரை வரையப்படுகிறது.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் சித்தர்கள் பயன்படுத்திய மூல மருந்தான இந்த விண்ணோர் மருந்து இதற்கு அமிர்தம்,முப்பு, ஆதி மருந்து குரு மருந்து கற்பம் என்ற வேறு பெயர்களும் உண்டு. அதைப்போலவே நோய்களுக்கு வியாதி சட்டை, ஊனம்,அழுக்கு ,விடம், மலம் பாவபதிவு, மச்சம் ,மாற்று, வினை எனப்பலபெயர்கள் உண்டு.

தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது என்னும் பழமொழிக்கேற்ப இந்த மருந்தைப் பற்றிய விவரங்களைத் தெளிவாகக் கூறாமையாலும் பின் வந்தோர் தெளிவாகக் கல்லாமையாலும், இம்மருந்தானது வழக்கிலிருந்து மறைந்து விட்டது. ஆயினும் இந்த மருந்தைப்பற்றி சித்தர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புகளும், இக்கட்டுரை ஆசிரியரின் கல்வி கேள்வி மற்றும் அனுபவ அறிவும், இந்த மருந்தைப்பற்றி அறிய வழிவகுத்தது. விண்ணோர் மருந்தானது காயகற்ப மருந்துகளின் அடிப்படையில் பிணி, மூப்பு , சாக்காடு என்ற அவத்தைகளை வென்றதை உணரும் போது பெரும் வியப்பாக உள்ளது.

ஒரு நோய்க்குப் பலமருந்து ஒருநோயின் குறிகுணத்திற்க்கு பல மருந்து என்ற வழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு எல்லா நோய்களுக்கும் ஒரே மருந்து என்ற தத்துவம் நம்ப இயலாததாக இருந்தாலும், இந்த மருந்தின் தன்மை ஸ்டெம் செல் சிகிச்சை Bone Marrow மாற்று அறுவை சிகிச்சையின் தன்மையை ஒத்திருக்கிறது.

அக்டோபர் 2008 ல் ஜெர்மனியர்கள் விதையிலிருந்து எடுத்த விந்தணுக்களை ஸ்டெம் செல் சிகிச்சைக்குப் பயன்படுத்தினர். கிம் எட் ஆல் என்ற அறிஞர் மே 2009 ல் தோல் செல்லிருந்து ஸ்டெம் செல்களை உருவாக்கினர் .இங் ஙனம் பெறப்பட்ட ஸ்டெம் செல்கள் Enbnyonic Cells,Hepatic Cells,Myogenic Cells, Adipogenic Cells, Osteogenic Cells மற்றும் Neuronal Cells ஆக மாறுபாடடைந்து நோய்களைக்குணப்படுத்து கின்றன. இந்தக்கருத்து சித்த மருத்துவத்தின் சாரம் முதலான ஏழு உடற் தாதுக்களுடன் ஒத்த கருத்தாக உள்ளது.

இந்த சிகிச்சையின் முடிவில் வயதானோர் மற்றும் வியாதிகளால் பாதிக்கப்பட்டோர் அவரவர்தம் இன்னல்கள் நீங்கி இளைஞர்களாகவும், வியாதிகளிலிருந்து விடுபட்டவர்களாகவும் வீடு திரும்புவர்.

மனிதர்களின் திடக்கழிவுகள் ஆசன வாயில் வெயியேறின் உடல் நல நிலை ஆனால் ஆசனவாயின் வழியாக திரவக்கழிவோ வாயுக் கழிவோ வெளியேறின் உடல் நலம் பாதித்த நிலை.

திரவக்கழிவுகள் சிறு நீராக வெளியேறின் உடல் நல நிலை சிறு நீரில் காற்றுக் குமிழிகளோ நிறமாற்றம் மற்றும் வீழ்படிவோடு திடக்கழிவுகள் வெளியேறின் உடல் நலம் பாதித்த நிலை.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வாயுக்கழிவுகள் நாசித் துவரங்களின் வழி வெளியேறின் உடல் நல நிலை நாசித்துவாரம் வழியாக நீர் கழிவுகளோ (சளி). நிறமாற்றத்துடனே விழி படிவுகளாக திட கழிவுகளோ வெளியேறின் உடல் நலம் பாதித்த நிலை என்பதைக் கொண்டு உடல் நல பாதிப்பினை எளிதில் அறிந்து சிகிச்சை தரலாம்.

ஒன்றான கற்பத்தையுண்ணாதே மாண்பர்கள் கண்ணான வேதைக்குக் கலங்கியழுவார்கள்

பண்ணான கற்பம் பதிந்திடு மேனியில்

தண்ணாய் நவலோகஞ்சாரப்பசும்பொன்னே

மருத்துவத்துறையின் முதல் மருந்தான இந்த கற்பமருந்தை உண்ணாமல் வலி முதலான பல துன்பங்களால் கலங்கியழுகின்ற நிலையில் உள்ள மனிதர்கள், அவரவர்களுக்குத் தகுதியான (தேவையான) மருந்தை உண்டு உடலில் பதிய வைக்க, நவஉலோகங்களுக்கு நிகரான உடலை பொன்னென மின்னச் செய்யும்.

நாளை நம்பிக்கை நட்சத்திரமான இந்த மருந்தினால் யாருடைய பிழைப்பும் கெட்டுவிடும் என்று எண்ணாமல், என் மருந்து உன் மருந்து என்ற குறுகிய எண்ணங்களைத் தாண்டி கூட்டு முயற்சியால் இம்மருந்தின் துணையினால் மரணத்தை வென்றால்- ஊனத்தைக் குணமாக்கினால் -நோய்களை குணமாக்கினால் நோய்குறிகுணங்களைக் கட்டுப்படுத்தினால் நம் சித்த மருத்துவத்திற்கும் நாட்டிற்கும் பெயரும், பொருளும் சேர வழிவகுக்கும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ANTI FUNGAL ACTIVITY OF A SIDDHA HERBO MINERAL DUSTING POWDER PUN PODI.

M. Muthumari, V. Ponnaiya, K.V. Mohanapriya, G. Nivetha, P. Kokila
IInd Professional BSMS Students, Govt. Siddha Medical College, Palayamkottai, Tamilnadu.
Dr. Thomas M. Walter
Lecturer, Dept. of Gunapadam, Govt. Siddha Medical College, Palayamkottai.

Abstract:

Siddha system has definite answers for chronic diseases especially painful rheumatologic conditions, skin disorders, metabolic disorders etc. Out of the 32 internal and 32 external medicines, dusting powders form an important place. Poora podi, pun podi, vengara podi, powders of Indian acalypha, ring worm shrub are some examples of dusting powders. While going through Siddha literatures, the authors of this paper came across a formula, 'Pun podi' which seems to be having potent anti-microbial and anti fungal activities. The anti-microbial activity of this test drug has already been studied and hence the authors decided to screen its anti-fungal activity in various concentrations. *Candida albicans* and Aspergillus sps are the organisms tested in Antimytotic medium and the results are being discussed.

Key words: Pun podi, Siddha dusting powder, anti-fungal.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வசப்படுத்தும் வசம்பின் சிறப்பு

Dr.S.M.K. ரஹ்மத்துல்லா
செங்கோட்டை.

பிள்ளை வளர்த்தி என்று சொல்லப்படும் வசம்பிற்கு காதல் இலக்கியமே உண்டு. இதன் தாவரயியல் பெயர் (Acorus Calamus) அக்கோரஸ் காலமஸ், இதற்கு கிரேக்கபுராணத்தில் பெயர் காரணம் உள்ளது. காலமஸ் (Kalamus) கார்பஸ் (Karpus) என்ற இரு காதலர்களில், காலமஸ் என்ற காதலன் நீரில் மூழ்கி இறந்த துக்கம் தாளாமல், கார்பஸ் என்ற காதலி நீரில் மூழ்கி தான் உயிரை மாய்த்த போது வசம்பின் இலைகளாக உருவம் எடுத்தாள் என்று சுட்டி காட்டியமையால் இதற்கு அக்கோரஸ் காலமஸ் என்ற பெயர் வந்தது. அதன் பின்பு சமூரேஸ் (Samurai's) என்ற ஜப்பான் நாட்டில் உள்ள ஒரு சமுதாயத்தினர் வசம்பின் இலைகளை வீரத்தின் சின்னமாக வைத்தனர். காரணம் வசம்பின் இலைகள் வாள் போன்று கூர்மையுடையதே. அதன் இலைகளை சிறு பிள்ளைகள் குளிக்கும் தண்ணீரில் ஊற வைத்து குளிக்க வைத்தால் உடல் ஊக்கம் பெற்று உள்ளம் உற்சாகமும் தைரியமும் பெறும் என்பது அவர்கள் நம்பிக்கை. வசம்பில் (Asarne) அசார்னி என்ற விசத்தன்மை கொண்ட பொருள் உண்டு. அதனால் தான் சிறு பிள்ளைகளுக்கு கொடுக்கும் போது அதை சுட்டு கொடுக்கும் பழக்கம் உள்ளது. அதை சுடும் போது அந்த விஷத்தன்மை நீங்கிவிடுகிறது. ஆமணக்கு, கடுக்காய் வசம்பு என்பவை பிள்ளை வளர்த்தியில் சேர்க்கப்பட்டாலும் வசம்பு தான் பிள்ளை வளர்த்தியில் பெரும் பங்கு வகுக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிய வேண்டும். வசம்பு நினைவாற்றல் பெருக்ககூடியது. விறுவிறுப்பு தன்மையுள்ளது. சிறந்த வீரியம் உள்ளது. கசப்பு தன்மை கொண்டது.

உலகில் மூலிகை பற்றி முதல் முதலில் கட்டுரை எழுதிய (Dios Corides) டயாஸ்கோரைடுஸ் என்ற எழுத்தாளர் இது அஸ்துமா, சளி போன்றவற்றிற்கு மிக சிறந்த மருந்து என்று குறிப்பிட்டுள்ளார். சைனா நாட்டில் வீக்கம், மலச்சிக்கலுக்கு பயன்படுத்துகிறார்கள்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இரசம் -வேறு பெயர்கள்- ஒரு விளக்கம்

G.MOHANA PRABHA
IInd professional BSMS
A.T.S.V.S Siddha Medical College & Hospital, Munchirai.

அறிவில் முழுமை பெற்ற அறிவியலில் தெளிவுற்ற அறிஞர்களாம், சித்தர்கள், ஒரு பொருளுக்க பல சொற்களை கையாண்டு உள்ளனர். பல சொற்களை கொண்டு ஒன்றை குறிப்பிட வேண்டிய அவசியம் சித்தர்களுக்கு ஏற்பட காரணம் என்ன? இதில் அறிவியல் ஏதும் புதைந்துள்ளதா? என்பதை அறிவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

இவ்விதத்தில் சித்த மருத்தவத்தில் தனி பெரும் சரக்காகவும் சித்தர்களின் கண்மணியாகிய இரசவாத கலையின் சூத்திரதாரியாகவும் எல்லாம் வல்ல பரம் பொருளாகிய ஈசனின் நாமத்திலேயே விளங்குகின்ற சரக்காகிய ***பாதரசத்தின்*** வேறு பெயர்களை இவ்வாய்விற்கு எடுத்துக்கொண்டேன்.

குணபாட நூலில் பாதரசத்திற்கு மட்டும் ஏறக்குறைய எழுபதிற்கும் மேற்பட்ட வேறுபெயர்கள் உள்ளன.

"காரமே சூதம்புண்யம் கற்பமாஞ் சாமஞ் சத்து
சூரிய பகையாஞ் சாதி சூத்திரன் துள்ளி யீசன்
வீரியஞ் சூழ்ச்சி நீராம் விண்ணினீர் விண்மருந்து
சீர்பெறு மிரத மென்று செப்பிலா ரொப்பில்லோரே
சுக்கிலம் போகம் ஞானம் சுயம்புரு வண்டு நாகம்
இக்கியம் விசயம் வேதமூல சிந்தூரஞ் சிந்து
பக்கிரம் பதினெண் பந்தி பாரதங்கனலே பூதம்
நக்கனார் குள்ள நாம நவிற்றலா மிரதப்பேரே".

-தசாங்க நிகண்டு

இதற்கான விளக்கங்களை இப்போது காண்போம்.

வேறு பெயர்கள் பொதுவில்

- சரக்கின் செய்கையை குறிப்பதாக உள்ளன.
- அதன் மருத்துவ பயன்பாட்டைக்குறிப்பதாக உள்ளன.
- அது கிடைக்கும் இடத்தை குறிப்பதாக உள்ளன.
- அதன் இயற்பண்பு மற்றும் வேதி பண்புகளையும் குறிப்பதாக உள்ளன.

பொதுவாக வேறு பெயர்கள் ஒரு சரக்கைப் பற்றிய சித்தர்களின் ஆராய்ச்சி முடிவாகவும் இருந்தால் அது மிகையாகாது.

"சரக்கிற் கலந்திடு சீவன்"

என்ற சட்டை முனிபால் பட்டம் கட்டப்பட்ட இரசத்தின் வேறு பெயர்களை ஒவ்வொன்றாக ஆராயவும்.

இரசம்

இரசம் என்ற சொல்லுக்கு சத்து என்று பெயர். எல்லா மருந்துக்களுக்கும் சத்து பொருளாக இருப்பதால் இரசம் என்று அழைக்கிறோம். இது மருந்துகள் செய்வதில் அதி முக்கியமானது என்ற காரணத்தினாலே இதை 'சரக்கிற்கலந்திடு சீவன்' என சட்டை முனி கூறுகிறார்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

காரம்

இது திரவ நிலையில் உள்ள ஓர் உலோகம். இதில் **காரத்தன்மை** அதிகமாக உள்ளது என்பது ஆய்வாளர்களின் கருத்து. இக்காரணத்தை முன்னிட்டு இதற்கு காரம் என வழங்கப்பட்டுள்ளது.

சூதம்

சூதம் என்ற சொல்லை சூது + அம் எனப்பிரிக்கலாம். சூதின் போது சூதாட வைத்த பொருள் முழுமையாக கிடைக்கலாம் அல்லது ஒன்று இல்லாது போகலாம். பாதரசம் ஒரு பாடாண சரக்காகும். அதாவது புகைச் சரக்காகும். இது ஒரிரு வறட்டிகளிலே புகைந்து போவதை அறிய முடிகிறது. ஆகையால் சூதம் என்னும் பெயர் இது எளிதில் புகையும் தன்மை உள்ள காரணத்தால் வழங்கப்பட்டுள்ளது.

புண்யம்

இதுகற்ப யோகங்களுக்கும் நோய் நிலைகளுக்கும் மிகவும் முக்கியமான மருந்தாகும். இதன் மேன்மையை குறிப் பதற்காகவே இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

கற்பம்

உடலில் உயிரை எப்போதும் நிலையாக வைத்திற்க பயன்படும் கற்ப விதியில் ஈற்றில் அருந்த வேண்டிய மருந்து பாதரசமாகும்.

" காதையீ தல்ல கற்பம்

காபஞ் சித்திக்கு மாமே"

-தேரன் சேகரப்பா

ஒருவருக்கு அழியா தன்மையை வழங்குகின்ற காரணத்தால் இதற்கு கற்பம் என்ற பெயரை சித்தர்கள் கொடுத்துள்ளனர்

சூரிய பகை

இது சூரிய ஒளியில் படும் படி திறந்த வெளியில் வைக்க எளிதில் ஆவியாகும் தன்மை உடையது. ஆகையால் இதனை பத்திரப்படுத்த ஒரு வகையான குறிப்பிட்ட புட்டிகளில் மூடிக்கொண்டு அடைத்தே வைப்பர். இது எளிதில் சூரிய ஒளியிலும் ஆவியாகக் கூடியது வினைபுரியத்தக்கது என்பதால் இப்பெயர் வழங்கப்பட்டது.

சுக்கிலம் விந்து

வெண்மை நிறமுடையது. சுக்கில தாதுவை மிகுதியாக வல்லது. சுக்கில தாதுவின் குற்றங்கள் அனைத்தையும் நீக்கவல்லது. மேகபிணிகளுக்க தனிபெரும் மருந்து.

சூழ்ச்சி நீர்

இதனை கொண்டு பற்ப, செந்தூரகட்டு செய்வது கடினம். இது எளிதில் வாதியையும், வைத்தியனையும் ஏமாறச்செய்துவிடும். ஆகையால் சூழ்ச்சி நீர் எனப்படுகிறது.

விண்ணினீர், விண்மருந்து

விண்ணவர் உரை என்னும் தேவ மருத்துவத்தில் முக்கியமான மருந்து பாதரசம் ஆகும். இக்காரணத்தை முன்னிட்டும் ககன குளிகை செய்ய அடிப்படையான மருந்து இதுவாகும். ஆகையால் இப்பெயர் பெற்றது.

ஞானம்,வேத மூலம்

ஞானம்- அறிவு, வேதம் - அறிவு

அறிவை விருத்தி செய்யவல்லது ஆகையால் இப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

விசயம்

விசயம்- வெற்றி

முறையாக முடிக்கப் பெற்ற இம் மருந்து ஒருவருக்கு பிறவாமை, முதலான பல வெற்றிகளை தரவல்லது.

சூத்திரன்

சூத்திரன் என்றால் எவன் ஒருவனால் ஒரு காரியம் திறம் பட முடிக்கப்படுகிறதோ அவனை சூத்திரன் என்று அழைப்பர். பாதரசம் மருந்துகள் செய்வதிலும், இரசவாத பிரயோகத்திலும் கற்பயோக பிரயோகத்திலும் சூத்திரதாரியாக இருப்பதாகும். ஆகையால் சூத்திரன் என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

ஈசன்

எவன் ஒருவனால் படைத்தல், காத்தல், அழித்தல், துடைத்தல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களும் புரிகின்றானோ அவனை ஈசன் என்று அழைப்பர். இரசத்தைக் கொண்டு மேற் கூறிய ஐந்தொழில்களையும் செய்ய முடியும் ஆதலால் ஈசன் என்னும் நாமம் வழங்கப்பட்டுள்ளது.

வீரியம், சிவ வீரியம், சங்கரன் விந்து

இதனை முறைப்படி மருந்தாக செய்து அருந்த ஒருவருக்கு வீரியத்தையும் பலத்தையும் தரவல்லது.

சிந்தூரம்

சுத்தமான இரசம் செந்நிறம் உடையது இரசமானது செந்நிறத்தையே பெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவநிதி - *" பவழம் கனிந்தாலொத்த செம்மேனியராம் சிவப்பிரானை ஒக்கும்"*

சுயம்பு

ஆதி அந்தம் இல்லாத இறைவனுடைய (ஈசன்) பெயரால் வழங்கப்படுகின்றமையால் இதற்கு சுயம்பு என்னும் பெயர் பெற்றது.

கனல்

இதன் வெப்ப வீரியத்தை குறிப்பதற்காகவும் கனலால் எழும் நோய்களை நீக்குகின்ற மையாலும் இதற்கு இப் பெயர் வழங்கப் பட்டுள்ளது.

சிவன்,சீவன்

ஒளி நிறம் பொருந்தியது. உடலுக்கு ஒளியையும் வனப்பையும் தரவல்லது. ஆதலால் ஒளி என்னும் பொருள் படும். இவ்விரு பெயர்களும் இரசத்திற்கு வழங்கப்பட்டது.

இனிமை

இனிப்பு சுவை உடையது

சிவசக்தி

அருட்பெரும் பொருளாம் சிவனின் ஆற்றலுக்கு நிகரானது என்பதால் சிவசக்தி எனப்படுகிறது.

பராபரம்

பரம் என்றால் நிகரற்றது,உயர்ந்து, எங்கும் வியாபித்து இருப்பது, எல்லாம் ஆனது. அதாவது உயர்ந்தவற்றிக்கு எல்லாம் உயர்ந்தது .தனக்கு ஒப்புமை இல்லாதது எனப்படும்.

வாசுகிநாதன், கணவன், மலையான், குறவன், வரட்டியான், அந்தரகந்தன்

அனைத்தும் முழுமுதற்கடவுளும் சித்தனுமாகிய சிவனைக் குறிப்பது. அவர் பெயரால் இச்சரக்கு வழங்கப்படுகின்றமையால் சிவனைக் குறிக்கும் பெயர்கள் இதனை குறிப்பதாயிற்று.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கேசரி,வேந்தன்

கேசரி- சிங்கம், எலுமிச்சம் பழம்

விலங்குகளின் அரசனாக கருதப்படுகிறது சிங்கம் அதற்கு ஒப்பாக மருந்துகளில் தலைமையானது என்பதால் கேசரி எனப்படுகிறது.

போகம்

போகம் - இன்பம்

இதனை மருந்தாக்கி தக்க படி அருந்தி வர போகத்தை மிக வைக்க கூடியது

பதினெண் பந்தி

பந்தி – கட்டு

இது மருந்துச் செய்யும் போது கட்டுவது கடினம். இதனை பதினெண் சித்தர்களும் கட்டு செய்ய பயன்படுத்தி இருக்கலாம் என்ற காரணத்தினால் இப்பெயர் வழங்கப் பட்டிருக்கலாம்.

இவ்வாறு இரசமானது பல பெயர்களைக் கொண்டு வழங்கப் பெறுகிறது. இதன் வேறு பெயர்களைக் கொண்டே இந்த சரக்கின் தனிதன்மையை அறிய முடிகிறது. இத்தகைய பழம் பெரும் பெயர்களைக் கொண்ட இரசம் பல பெரு நோய்களையும் தீர்க்க வல்லது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ROLE OF HERBALS ON DIABETES MELLITUS TREATMENT

D.S.Vaniswari
S.Karthick Nagarajan
S.P.Sundara Pandian,
M.Praveen
BSMS -FINAL YEAR, SIVARAJ SIDDHA MADICAL COLLEGE, SALEM.

INTRODUCTION:

Diabetes is a lifelong disease in which there are high levels of sugar in the blood .It is a condition which can be compared with Neerizhivu or Madhumegam in Siddha.

MAIN OBJECTIVES:

Main objective is to focus the effectiveness and faithfulness of the siddha herbal medicine. Gymnema sylvestre is an herb native to forest of southern central India and Sri Lanka.

SIGNS AND SYMPTOMS OF DIABETES MELLITUS:

Loss of glucose in urine. Appearance of glucose in urine. Osmotic diuresis-excess of glucose in renal tubules develop osmotic effect, Polyuria, Polydipsia, Polyphagia, Asthenia-loss of strength, Acidosis-lack of insulin formation of excess ketoacids leading ketoacidosis.

EFFECT OF GYMNEMA SYLVESTRE:

Currently, *Gymnema sylvestre* is one of the major botanicals being administered for those suffering from diabetes, to boos the insulin levels and controlling healthy blood sugar levels.

- Dried leaf powder of this plant can be given in the dose of 2 to 4 gram daily twice a day for 5 to 6 months
- It is very effective to control the blood sugar when compared to other synthetic drugs
- Administration of 5 to 7 grams of dried leaf powder along with milk can be given for diabetes, sexual abnormalities, pyurea.

Leaf decoction administered twice for 3 to 4 weeks for diabetes, obesity, and hypercholesterolemia.

OTHER IMPORTANT MEDICINAL PLANTS USED FOR DIABETES MELLITUS;

Cassai auriculata, Terminalia arjuna, Syzygium cumini, Cyperus roundus, Costus specios and *Terminalia chebula etc.*

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

SANTHANA KUZHAMBU – A SIDDHA REMEDY FOR SUMMER DISEASES

R. Gurulakshmi, M. Srisakthi Logisha, R. Meenaloshini, T. Swathini
Final Professional BSMS Students, Govt. Siddha Medical College, Palayamkottai

Dr.S. Sulfin Nihar
Asst. Lecturer, Gunapadam Department, Govt. Siddha Medical College, Palayamkottai.

Abstract:

In a tropical country like India, people suffer from seasonal disorders. Be it extreme cold at some places and extreme hot at some places, people have to cope up with both. The stressful condition arises out of hot climate and its outcome such as boils, prickly heat, sun stroke etc. People of the yesteryears were familiar with the ways of managing these conditions. Using sandal as external application was one among these remediable measures. When going through the Siddha literatures, the authors of this paper found a formula *'Santhana Kuzhambu'* consisting of sandal and Borneo camphor, meant for both internal and external applications. Since no scientific studies have been carried out in this formula, the authors decided to test its efficacy through anti-microbial sensitivity studies. Streptococus, Staphylococcus, E.coli, Proteus species, Pseudomonas aerugionsa and Trichomonas vaginalis were the organisms tested. The test drug *'Santhana Kuzhambu'* exhibited sensitivity against Pseudomonas aerugionsa.

Key words: *Santhana Kuzhambu*, Siddha anti-microbials, *Pura marunthugal.*

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

FIREFLY FOR NIGHTBLINDNESS – SCIENTIFIC APPROACH

Dr. F. Sibe Mary M.D (Siddha)
Siddha Consultant, Gerdi Gutperle Agasthiyar Muni, Child Care Centre, Vellamadam.

INTRODUCTION:

Siddha system of medicine is an ancient system of medicine. The term 'Siddha' comes from the word 'Siddhi' which means heavenly bliss. The persons who have attained heavenly bliss are called as siddhars.

In the Siddha system, chemistry had been found developed into a science auxiliary to medicine and Alchemy. Siddhars Presentation of chemistry is masterly but unfortunately it is fragmentary. If one really wants to gather knowledge and collect materials for research in the field of ancient chemistry, he can find all that he wants only in the works of Tamil Siddhars. Siddhars were the greatest scientist of both natural and spiritual of ancient days and they were fully acquainted with almost all the branches of science. It is true that Siddhars worked on the basis of Mei-gnana principle and we human will work on the basis of Vin-gnana principle.

In this way one of the preparations used by Siddhars is taken for the study.

LITERATURE SURVEY

" துன்மினிப் பூச்சிதன்னை அமுதினுள்
வைட்தி ரவினில் நீ விழுங்கிடில்
நின்னயட் துடனோர் மூன்று இரவே
நீவிழுங்கிடி லோ வீழிமாலைப்போம்".

பொருள்:

மின்மினிப் பூச்சியைப் பிடிட்து வெல்லட்தில் வைட்துப் பொதிந்து மூன்று நாள் விழுங்க மாலைக்கண் தீரும்.

ஆதாரம்: குணபாடம் – தாது ஜீவ வகுப்பு

Synonym: When fireflies is kept inside palm jaggery and swallowed for 3 days it cures Night blindness.

NIGHT BLINDNESS

Nigh blindness is caused by vitamin – A deficiency, which is a fat soluble vitamin also called as Retinol. Vitamin A being an alcohol forms esters. It can be oxidised to form aldehyde- Retinene, which is an intermediate in the Rhodopsin cycle is vitamin A aldehyde. Vitamin A has a specific role to play in the physiological mechanism involved in vision.

Early sign: Inability to see in dim light. This condition is called Nightblindess or Nyctalopia.

MECHANISM OF WALD VISUAL CYCLE

Constant splitting and resynthesis of a light sensitive vitamin A containing pigment is present in the retina.

Retina

Retina consist of 2 receptor cells they are the rods & cones.

- Rods for visual acuity in dim light (Night vision)
- Cones for colour & detailed vision in bright light

When light waves fall on these receptors chemical change are produced which in turn liberate nerve impulse. They in turn pass to the brain and produce a photochemical process.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

The rod cells contain a photosensitive pigment called **rhodopsin** which is called visual purple. It is a conjugated protein containing opsin, which is the protein and retinene (Vitamin A aldehyde) the prosthetic group.

When light strikes the retina rhodopsin is converted to unstable orange coloured product **lumirhodopsin** and **meta – rhodopsin**. Finally it is split to for an yellow coloured mixture of opsin and trans-retinene which is an inactive vitamin A aldehyde. Trans retinene is reduced to trans vitamin A by retinene reductase and NADH. Trans - vitamin A which is inactive passes into the blood. Resynthesis of rhodopsin occur, when cis vitamin A is formed and enter the retina from the blood. Cis vitamin A is oxidised to cis-retinene by the reverse action of retinene reductase and NAD. Cis-retinene couples with opsin to from the active visual purple, rhodopsin in the retina.



FIREFLY (PHOTINUS PYRALIS)

The Fireflies emit light. This is due to the presence of bioluminescence. The substances involved in bioluminescence are the luciferin, which is a benzothiazole derivative. Luciferase (E) catalyses the conversion of reduced luciferin (LH2) with ATP to an adenylate, which emit light on oxidation.

STRUCTURE OF LUCIFERIN



How Bioluminoscene Works:

- $LH_2 + ATP + E \rightarrow E\text{-}LH_2 - AMP + PPi$ (LH_2-Luciferin) (E- Luciferin) ($E\text{-}LH_2$ – AMP – Adenylate) (PPi - Pyrophosphate)
- $ELH_2 - AMP + O2 \rightarrow$ light + products



When luciferin enter the blood stream it enter into the cell (rods) these cell emits light, which produce the photosensitive pigment called rhodospin that prevent Night blindness.

Conclusion

When fireflies is taken in the substance **luciferin** enter the blood stream then it enter into the cell (rods) this cells emits light which produce the photo sensitive pigment called **rhodopsin** and prevents the disease **Night blindness.**

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

THIRIPALA AS A BIOFILMICIDE

M.SUBARNA, B.S.M.S,
A.T.S.V.S SIDDHA MEDICAL COLLEGE, MUNCHIRAI.

INTRODUCTION:

Bacteria first appeared on earth about 3.6 billion years ago. Antony Van Leeuwunhoek was the first person to visualize, graphically illustrate and label ANIMALCULES, which he found in Plaque scraped from his own teeth.

Biofilm is an aggregate of microorganism in which cells are stuck to each other to a surface. These adherent cells are frequently embedded within a self-produced matrix of extra cellular polymeric substances [EPS]. It is referred as a polymeric jumble of DNA, proteins, and polysaccharides. Biofilm is a complex substance, growing on solid substances and are characterized - structural heterogeneity, genetic diversity, complex community interactions, and extra cellular matrix of polymeric substances. Biofilms found in nature where there is moisture.

EPS: Bacterial cells are surrounded by the EPS. It forms an envelope around the cell wall. It is a gelatinous polymer made up of either polysaccharide, or polypeptide or both with microorganisms are highly resistant to antimicrobial treatment and are tenaciously bound to the surface.

BIOFILMS A GREAT THREAT TO IMPLANTS

A significant num of people are devices implanted in the body such as catheters, artificial joints, and mechanical heart valves. When implanted material becomes colonized by microorganisms, a slow developing but persistent infection results.

USING THIRIPALA CIDALS BIOFILM

THIRIPALA is acting as a cleanser. It has a cleansing effect on the digestive system and blood. Research has found Thiripala is a potent antioxidant, antimicrobial and anticancerous. *phyllanthus officinalis*[nellikai]; *terminalia chebula* [kadukai]; *terminalia bellirica* [thaandrikai] are the ingredients of thiripala.

Phyllanthus officinalis : It is good for all pitha diseases where there is inflammation and it increase the RBC .It acts as a vermifuge. It is used for urinary diseases like painful urination.

Terminalia bellirica : It is having an antiseptic action. It used for the removal of kapam accumulations in the urinary tract.

Terminalia chebula : It is having an action anthelmintic. It is used in urinary disease and used as a gargle in water for stomatits and ulcerated gums. Thiripala made as a paste and mixed with ghee and ointment used for chronic ulceration, and many skin diseases with profuse discharge

THIRIPALA ACTS ON BIOFILM

Thiripala acts on the extra cellular matrix of polymerised substances, which was

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

produced by the microorganism and makes it to disintegrate and dislocate from the mucous nature. So thiripala can act as a scrubber and protect the nature of the organ as such.

CONCLUSION:

Commonly thiripala uses for;

1).Digestion, 2).gouty arthritis, 3).healing compounds for wound, 4).anti –oxidant and free radical scavenger, 5).anti- cancer compound, 6).production against gamma radiation.

Thus the thiripala acts as a astringent, antioxidant, anticancerous, antiseptic, vermifuge etc, so it acts on the extra cellular matrix of the polymerized substances and make it to disintegrate and dislocate and act as a scrubber and protect the nature of the organs.

****

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வண்ண மருத்துவம்

S.VINOTH
II'nd Professional BSMS, A.T.S.V.S Siddha Medical College & Hospital, Munchirai.

வண்ணமருத்துவம் என்பது வண்ணங்களைக் கொண்டு நோய் களைகுணபடுத்தும் ஒரு வகை மருத்துவம். வண்ணங்கள் காட்சிகளுக்கு அழகு சேர்ப்பவைகள். வண்ணங்கள் அழகு சேர்ப்பவைகள் மட்டுமல்ல, பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, நம் முன்னோர்கள் வண்ணங்களைக்கொண்டு மருத்துவம் செய்துள்ளனர். அது மட்டுமின்றி கடவுளாகவும் உருவபடுத்தி போற்றி வணங்கியுள்ளார்கள். சூரியனில் இருந்து வரும் கதிர்களை ஒரு முப்பட்டகத்தின் வழியே செலுத்தினால் அது 7 வண்ணங்களாக பிரிவதைக் காணலாம். சூரியக்கதிரின் 7 குழந்தைகளே இந்த 7 வண்ணங்கள் (VIBGYOR). நம் முன்னோர்கள் சூரியக்கடவுளையே ஆதியில் வணங்கியுள்ளனர் என்பது திண்ணம்.

வண்ணங்களின் குணாதிசியங்கள்

வண்ணங்கள் ஒருவருடைய குணங்களைத் தீர்மானிக்கும் திறனுடையவை. நிறங்களைக்கொண்டே ஒருவரைப்பற்றிய அடிப்படைவிஷயங்களை அறிந்து கொள்ளலாம். நிறங்களின் திறனுணர்ந்து தான் நம் முன்னோர்கள் ஒவ்வொரு நிறத்தையும் பயன்படுத்தியுள்ளனார்.

மஞ்கள நிகழ்வுக்கு மஞ்சள் நிறம்,
அமங்கிள நிகழ்வுக்கு கருமை நிறம்
அமைதிக்கு வெண்மை நிறம்

என பலவாறு உபயோகித்துள்ளனர். ஆனால் இவைகளைக் கொண்டு எவ்வாறு ஒருவரை மதிப்பீடு செய்வது என பார்த்தோமானால் சற்று ஆழ்ந்து பயணிக்க வேண்டும். வெள்ளை நிறத்தை எடுத்துக் கொண்டால் அது அமைதியின் நிறமாகக் பொதுவாக கூறப்படுகிறது. இருப்பினும், அது தான் ஆளுமை திறனையும் அளிக்கிறது. அரசியல் கட்சி தலைவர்கள், நம்மூர் நாட்டாமைகள் என அனைவரிடத்திலும் வெள்ளை நிறத்தினைக் காணலாம். அவர்களை பார்க்கும் நமக்கு அவர்கள் மீது ஒரு மதிப்புண்டாகிறது. வெள்ளை நிற வேட்டி, சட்டைகளை அணியும் போதே நமக்கு ஒரு சுறுசுறுப்பு, தலைமை உணர்வு, தூய்மை, ஒழுக்கமான தன்மை முதலியவற்றை உணர்வோம். இது போல் நம் வாழ்வில் ஒவ்வொரு நிறமும் ஒரு பங்களிப்பை அளிக்கிறது.

செம்பொன் நிறம் - தியாகம், அன்பு, காலம் தவறாமை போன்ற குணங்களைக் கொடுக்கக்கூடியது.

பச்சை - வளமை, இளமைமனம், வெற்றி, பசுமை போன்ற குணங்களை அழிக்கக்கூடியது.

சிவப்பு - சக்தி, துணிச்சல், பெருந்தன்மை, புதுமை போன்ற உணர்வுகளைத்தரக்கூடியது.

கரு நீலம் - தான் என்கிற கர்வத்தை தரக்கூடியது. மந்திர, தந்திர வேலைகளில் ஈடுபாடு உண்டு பண்ணுவதும் ஆகும்.

நீலம் - நீல நிறமானது சந்தோஷம், தெய்வ நம்பிக்கை, தத்துவ அறிவு, நல்ல தூக்கம், போன்றவற்றை உண்டுபண்ணும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கருப்பு - மனஉறுதி, கடின உழைப்பு,நேர்வழி போன்ற பண்புகளை அளிக்கும்.

அரக்கு - அறிவுப்பூர்வமான சிந்தனை,கற்பனை வளம்முதலியவற்றை அளிக்கும்.

சாம்பல் நிறம் - வேலையில் முழு ஈடுபாடு, நிதானம், எச்சரிக்கை போன்ற குணங்களைத் தரும்.

ஆதாரஙகள்	நிறங்கள்
மூலாதாரம்	சிகப்பு
சுவாதிஷ்டானும்	செம்பொன் நிறம்
மணிப்பூரகம்	பச்சை
அனாகதம்	மஞ்சள்
விசுக்தி	நீலம்
ஆஞ்ஞை	கருநீலம்
சகஸ்ரஹாரம	- ஏதைடநவ

நம் உடலில் ஏற்படும் அனைத்து நோய்களிலும் இந்த ஆதாரங்களில் மாற்றம் நிகழும். நாம் அந்த ஆதார மாற்றத்தை சரி செய்வதன் மூலம், நோயைப்போக்கலாம். ஆதார மாற்றத்தை சரி செய்ய நாம் கையில் எடுத்துள்ள ஆயுதமே "வண்ணங்கள்".

ஆதாரங்கள் நம் உடலில் அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் முக்கியமான நாளமில்லா சுரப்பிகள் அமைந்துள்ளன. உதாரணமாக ஆஞ்ஞை – சுவலிசுவர்க்கத்தை குறிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. இது போல் அனைத்து ஆதாரங்களும் ஒரு நாளமில்லா சுரப்பியுடன் தொடர்புள்ளது.

நாம் ஆதாரங்களில் ஏற்படும் பாதிப்புக்களை சரிசெய்வதன் மூலம் இந்த சுரப்பிகளின் செயல்பாட்டை சரி படுத்தலாம்.

எவ்வாறு நாம் வண்ணங்களைக் கொண்டு ஆதாரங்களை இயக்குவது எனக் கீழே காண்போம்.

நாம் ஆதாரங்களை நோக்கி வண்ணங்களை செலுத்த வேண்டியதில்லை, தியான முறைகள், வண்ண நீர், மற்றும் டெலிதெரபி, உணவு வகைகள் மூலம் வண்ணங்களைப் பெறுவதன் மூலம் ஆதார சீர் கேடுகளை சரிசெய்யலாம் ஒவ்வொரு முறையாகப் பார்ப்போம்.

வண்ணமும் சித்த மருத்துவமும்

வண்ணங்கள் ஒருவருடைய குணங்களை தீர்மானிக்கிறது. சரி அது எவ்வாறு நம் மருத்துவத்துடன் தொடர்புடையதாகிறது?

நம் உடலில் மூன்று உயர்ந்த தாதுக்கள் உள்ளன. அவை, ***வாதம் , பித்தம் , கபம்***மற்றும் உடலையும் வாத உடலினன், பித்த உடலினன், கப உடலினன், என மூன்றாக பிரிக்கின்றனர்.

வாத உடலின் உடல் நிறம் கருமையாகவும், பித்த உடலின் உடல் நிறம் மஞ்சளாகவும் கப உடலின் உடல் நிறம் வெண்மையாகவும் இருக்கும்.

இவ்வாறு அடிப்படையில் வண்ணமும் நம் உடலும் தொடர்புஉடையதாகிறது. இன்னும் சற்று ஊன்றி சிந்தித்தால், நம் உடலில் முக்கிய பங்கு வகிக்கும் ஆதாரங்காளாகிய ஆறு தத்துவங்கள், மூலாதாரம, சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அனாகதம் , விசுக்தி, ஆஞ்ஞை ஆகியவையும் வண்ணங்களால் சூழப்பட்டுள்ளது.

தியானம்

தியானம் என்பது சித்தர்கள் நமக்கு அருளிய ஒரு கலை.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தியானம் நிலையில் இருக்கும் போது நாம் உடலுக்கு தேவையானதாக கருதும் வண்ணத்தை எடுத்துக் கொள்ள முடியும்.

நம் உடலில் உதாரணமாக சுவலிசுவர்கம் சுரப்பியில் ஏதேனும் குறைபாடு உள்ளது. அதன் செயல்பாடு குறைவாக உள்ளது எனில் சிவப்பு நிறத்தை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். சிவப்பு நிறம் மூலதாரத்திற்க்குரியது. இது சுவலிசுவர்கத்தை தூண்டும்.

பத்மாசன நிலையில் இருக்கும் போது வேண்டிய நிறத்தை மனதில் நிறுத்தி, நான் Violet நிறத்தை உள்ளிழுக்கின்றேன் என மூச்சை உள்ளிழுக்கும் போது கூறவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் அந்த நிறமானது அதன் வேலையைச் செய்யும்.

வண்ண நீர்

இது ஒரு எளிய முறை ஆகும். வண்ண நீர்களை தயாரிக்க வேண்டும். ஏதேனும் உடல் குறைபாடுகளின் போது வேண்டிய நிறத்தை நோய்க்கேற்றவாறு எடுத்துக் கொள்ளவேண்டும்.

வண்ண நீர் தயாரித்தல்

ஒரு கண்ணாடி டம்ளர் எடுத்து அதில் முக்கால் பங்கு நீர் எடுத்து எந்த நிறம் தேவையோ அந்த நிறமுடைய ஒளி ஊடுருவக்கூடிய பாலிதீனை அதை சுற்றி ஒட்டி அதை சூரிய வெளியில் 3 மணிநேரம் வைத்து பின் உபயோகிக்கவும்.

டெலிதெரபி

இது ஒரு அழகிய அனைவரையும் வியப்புக்குள்ளாக்கும் ஒரு முறை, இதைப்பற்றி கூறவேண்டுமானால், நீங்கள் தமிழ் நாட்டின் கடைக்கோடியில் இருக்கிறீர்கள், உங்கள் நோயாளி உலகின் வேறு எந்த மூலையில் இருப்பினும் இம்முறை மூலம் நோயாளியின் நோயைக்கட்டுப்படுத்தலாம். இதைப்பற்றி விரிவாக்கி கூற இயலாது.

உணவு வகைகள்

நாம் உணவில் சேர்க்கும் உணவுவகை, காய் கறி, பழங்களின் மூலமும் நிறங்களை நாம் பெற முடியும். என நவீன ஆய்வு கூறுகிறது.

கேரட் ஐ எடுத்துக்கொண்டால் அதன் மூலம் செம்பொன்நிறத்தைப் பெறலாம்.

எந்தெந்த நோய்களுக்கு எந்தெந்த வண்ணங்களை உபயோகிப்பது எனக்காண்போம்.

நோய்களும் - வண்ணங்களும்

சிவப்பு நிறம் - இரத்தஓட்டக்குறைபாடு, நரம்பு மண்டலக்குறைபாடு, தண்டுவடபாதிப்புகள், மனச்சோர்வு, வாதநோய் போன்ற குறைபாடுகளைப் போக்க சிவப்பு நிறத்தைக் கையாளலாம்.

மஞ்சள் நிறம் - தசைவலிமை,செரிமானக் கோளாறு,மூளைச் செயல்பாடு, கல்லீரல் நோய் போன்றவற்றை சரி செய்ய மஞ்சள் நிறம் பயன்படுகிறது.

செம்பொன்னிறம் நிறம் - விதனக்கோளம், மூச்சுத்திணறல்,சுண்ணச்சத்துக்குறைவு, மூலைப்பால் சுரக்கானம், மண்ணீரல், கணையம், கய நோய், முடக்குவாதம், காக்காய் வலிப்பு போன்ற குறைபாடுகளை போக்கும்.

பச்சை நிறம் - தசைவலிமை, சுண்ணச்சத்துக் குறைவு, தண்டுவடக்குறைபாடு,குறைந்த இரத்த அழுத்தம், இருதய நோய், கல்லீரல் நோய், தொண்டைப்புண் போன்றவற்றை சரிசெய்யும் திறன் பச்சைக்குள்ளது.

நீல நிறம் - உடல் வளர்ச்சி, இருதய பலவீனம், தொண்டை நோய், காக்காய் வலிப்பு, வழுக்கை, விட்டமின் A குறைவால் வரும் கண்நோய்,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தலைவலி, பால்வினைநோய்கள், கருப்பை தொடர்பு நோய்கள், குடல் புண், கக்குவான் இருமல், தூக்கமின்மை போன்றவைகளுக்கு ஒரு தீர்வாக நீல நிறம் உள்ளது.

கருநீல நிறம் - கண்புரைநோய், குடல் வால்வு, கயநோய், மூக்கடைப்பு,மூக்கில் இரத்தம் வழிதல்,ஜன்னி போன்றவை சரியாகும்.

ஊதா நிறம் - மண்ணீரல் நோய்கள், இரத்தக்குற்றம், சிறு நீர்ப்பை சம்மந்தப்பட்ட நோய்கள், மூளைக்காய்ச்சல் முதலியவற்றை சரிசெய்யும்.

குறிப்பு

- Violet நிறம் தசைசெயல்பாட்டை பாதிக்கும். சரியான அளவுமட்டும் உபயோகிக்க வேண்டும்.
- நீலநிறத்தை ,குறை இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு உபயோகிக்கக்கூடாது. கபம் உள்ளவர்களுக்கு உபயோகிக்கக் கூடாது.
- பச்சை நிறம் அதிகமாக உபயோகிக் கப்பட்டால் மனதளவில் பொறாமை குணம் அதிகரிக்கும்.
- செம்பொன்நிறத்தை புற்றுநோயாளி களுக்கு உபயோகிக்கக்கூடாது.
- சிவப்புநிறத்தை உயர்இரத்த அழுத்த உள்ளவர்கள், காய்ச்சல் உள்ளவர்களுக்கு உபயோகிக்கக்கூடாது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அனுபவ வைத்தியம்

Rtn. டாக்டர். தலைவர் R. அமிர்தலிங்கம் ஆசான், CBIM
அகில இந்திய சித்த மருத்துவக்கழகம்,
201, வைத்தியநாதபுரம், கோட்டார்,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்-629602.

புங்கம் பால் தைலம்

½ லிட்டர் தேங்காய் எண்ணெய்

½ லிட்டலர் தேங்காய் பால்

புங்கம் பட்டை கஷாயம்,பூவரசம் பட்டை கசாயம் வகைக்கு ¼ லிட்டர் சேர்த்து கொதிக்க வைத்து துத்தம் துருசு பகளபுத்து 10 கிராம் பொடி செய்து ஷை போட்டு கொதிக்க வைத்து எண்ணெய் பருவம் வந்தவுடன் வடிகட்டி இரச கற்பூரம் 3 களஞ்சி பொடி செய்து போட்டு கலக்கி பின்பு இறக்கும் போது வேம்பாடம்பட்டை 6 களஞ்சி போட்டு கலக்கி வடிகட்டவும்.

சொரி சிரங்கு ஆறாத புண் கருத்தழும்பு இவைகளுக்கு மேலே போட்டு காலைமாலை தடவினால் நன்றாக குணமாகும். மஞ்சள் சிறுபயறு பொடி செய்து மேல் தேய்த்து கழுகவும்.

நீரழிவுக்குள்ள சூரணம்

சிறு குறிஞ்சாண, நாவற கொட்டை, மாங்கொட்டை பருப்பு, நிலவேம்பு, மருதம்பட்டை, அல்லி தண்டு, பொடுதலை, கடுக்காய், நெல்லிக்காய், வெந்தயம், தாணிக்காய் 20 களஞ்சு வீதம்,டித்தூள் 100 கிராம் எல்லாம் பொடித்து சூரணம் செய்து காலை, மாலை புளியமுத்து அளவு வாயில் போட்டு வென்னீர் குடிக்கவும். பொடி சாப்பிடும் போது சுகர் அளவு சோதனை செய்து கொள்ளவும் பின்பு 1 மாதம் களித்து சோதனை செய்யவும். வித்தியாசத்தை பார்த்தால் நோயின் தன்மை தெரியும்.

ஆலம்பால் தைலம்

ஆலம்பட்டை ,பூவரசம் பட்டை வகைக்கு ½ படி கஷாயம், சோற்றுக்கற்றாழை சாறு 1/4, படி, நல்லெண்ணெய் 1லிட்டர், துத்தம்,துருசு, பகளபுத்து , சதகுப்பை, நல்லமிளகு, கருஞ்சீரகம், செவ்வரளி, மஞ்சட்டி , கொட்டம், இராமிச்சம் இவை வகைக்கு 10 களஞ்சு வீதம் பொடித்து போட்டு கலக்கி கொதிக்க வைத்து எண்ணெய் பருவம் வந்தவுடன் ஷை 10 கிராம் வேம்பாடம் 25 கிராம் ராணி சாம்பிரணி போட்டு கலக்கி வடிகட்டவும்.

எலும்பு முறிவு சதை கட்டி வீக்கம் இவைகளுக்கு மேலே போடவும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மகளிர் மருத்துவத்தில் பெரும்பாடும் அதன் மருத்துவமும்

ஆசிரியர்
மரு. D.K. சௌந்திரராஜன் , எம்.டி.(சி)
இணைப்பேராசிரியர்

மாணவர் குழு

விபூஷ்னன். கோ, தமிழ்வாணி.ஆ, ஸ்ரீமுத்து மேகலா.மோ
இறுதியாண்டு பட்டப்படிப்பு மாணவர்கள்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை

வரையறை:

ஒரு பெண் மங்கைப்பருவம் அடைந்து குழந்தைப் பேற்றுக்குத் தகுதியாகக் கூடிய பருவமும் காலமும் பூப்புக் காலம் என்று மிகவும் சமூகத்தில் முக்கியமான ஒன்றாக போற்றக்கூடிய காலம்.

குழந்தை இல்லாத பெண்களை "மலடி" என்று சமூகம் பழித்து கூறுகின்றது.

ஒரு பெண் பூப்படைந்த பின்தான் அச்சம், மடம், நாணம் எனும் பெண்களுக்கே உண்டான நாணாவித குணங்கள் உண்டாவதாக சித்த மருத்துவ அறிவியலாளர்கள் கூறுவார்கள்.

ஒவ்வொரு மாதமும் பூப்பெய்தும் நிகழ்வு என்பது மகளிரில் வழக்கமாக நடைபெறும் விடயம் என்றாலும் அதன் முக்கியத்துவம் கருதியே பெண்ணின் தலைப்பூப்பெய்தலை பூப்புனித நீராட்டாக நடாத்தி மகிழ்ந்தனர் நம் நாட்டு மக்கள்.

அவ்வாறு பூப்பெய்தும் காலங்களில் மகளிரில் சுகரண ரீதியாக உண்டாகும் குருதி ஒழுகல் ஓர் அளவினதேயாகும். நம் சித்த மருத்துவ நூல்களில் அடிப்படையிலும், நவீன மகளிர் மருத்துவ நூற்களின் அடிப்படையிலும் இக்குருதி ஒழுகல் என்பது சீரானதாகவும், ஒரு பூப்பு உண்டான காலத்தில் சாதாரணமாக 100 மி.லி. முதல் 150 மி.லி. வரை குருதி ஒழுகும் தன்மை உடையது.

பூப்பு:

கருப்பை அறையினின்று யோனி வழியாக வெளித்தள்ளப்படும் குருதி ஒழுகலையும் அதனோடு சேர்ந்து வரும் கருப்பைச் சளிச்சவ்வையும் பூப்பு என்று சித்த மருத்துவ மகளிர் மருத்துவம் கூறுகின்றது.

பெரும்பாடு:

பூப்பு காலங்களில் அதிக அளவாகவும் அபரிமிதமாகவும் காணும் பூப்புவை பெரும்பாடு என்றழைப்பர்.

" அரிவையர் சிந்தாமணி" பெரும்பாட்டின் இலக்கணத்தை கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"கண்டாயோ பெரும்பாடு கலந்த மார்க்கம்
கருதிக்கேள் மின்னாளே நன்றாய் இன்னும்
கொண்ட படிகாரமுள்ள வகைகள் தின்றால்
கூறாக மாதவிடை காலம் தன்னில்
விண்டாலும் வாய்வு அது மிஞ்சினாலும்
விளங்கும் மாம்சம் அதிகம் புசித்தாலும்
உண்டாலும் மந்தமதில் புசித்தாலும்
உறக்கமது ஒழிந்த விதத்தாலும் (313)

ஆகுமே கடும் சுமடெடுப்பதாலும்
கதிப்பாக பகலுறக்கம் பகல் சம்போகம்
பாகுபெற குறுக்கதுதான் கூனிக்கொண்டு
பண்பாகவே உறங்கும் தன்மையாலும்
வாகுபெறவே அதிக புணர்ச்சியாலும்
வலுவாக மேகமது உற்பவித்து
தாகமுற சூடெழும்பி தளவாய் நீறி
தனி வயறும் கருக்குழியும் புண்ணுண்டாமே (314)

புண்ணாகி தேகமது மெலிவுமாகி
பொருந்தழலு தாகமதால் சோம்பலாகி
திண்ணமுற இளைப்பாகி அசனம் குன்றி
தேகமது தான் வெளுத்து நடை தள்ளாடி
வண்ணமுற மேல் மூச்சாகி நோவுமாகி
வளமான தாது கெட்டு கருகி தேகம்
எண்ணமுற பெரும்பாடு நோயுண்டாகும்
இதின்பேரும் குணம் கூறும் சாற்றுவனே" (315)

பொருள் :

- காரமுள்ள வகையான உணவுகளை உட்கொள்வதாலும்
- மாதவிடை காலங்களில் அதிக காரமான உணவுகளை உட்கொள்வதாலும்
- கீழ்நோக்குங்காலான அபானவாயு அதிகரித்து காணப்படுவதாலும்
- மாமிச உணவுவகை அதிகம் புசித்தலாலும்
- மந்தம் உண்டாகும் உணவுகளை உண்பதாலும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

- தூக்கமின்மையாலும்
- தலையில் மிகுந்த பாரம் சுமப்பதனாலும்
- பகலில் உறங்குவதாலும்
- பகலில் புணர்ச்சி மேற்கொண்டாலும்
- குறுக்கினை கூனிக்கொண்டு உறங்குவதனாலும்
- அதிக புணர்ச்சி புரிவதனால், மேகக் கசிவு ஏற்பட்டு, அதிக சூடு உண்டாகி, வயிற்றிலும் கருக்குழியிலும் புண்ணுண்டாகும்.
- உடல் மெலிவு ஏற்படும்
- அதிக சூட்டினால், தாகம் மிகுதியாக ஏற்படும்.
- உடல் சோர்வு அடையும்.
- மூச்சு வாங்கல், இளைப்பு தோன்றும்
- பசிக்கும் தன்மை குறையும்.
- உணவு சரியாக உட்கொள்ளாததால், குருதியில் செவ்விலங்கள் குறைந்து வெளுப்பு நோயை ஏற்படுத்தும்.
- நடக்க சிரமம், சிறிது தூரம் நடக்கினும் மேல் மூச்சு உண்டாகும்.
- உடற் தாதுக்கள் கேடடைந்து, உடல் கறுத்து பெரும்பாடு நோய் உண்டாகும்.

இவ்வாறு " அரிவையர் சிந்தாமணியில்" பெரும்பாட்டின் இலக்கணத்தை பற்றி எடுத்தியம்பியதைக் கண்டோம். மேலும் பெரும்பாட்டின் வகைகளை கீழ்வருமாறு காண்போம்.

வாத பெரும்பாடு - தீரும்

1. தலைவலி இருக்கும்
2. உடல் நோகும்
3. முதுகு, இடுப்பு நோகும்
4. உடல் உளைச்சல் உண்டாகும்
5. உடல் மெலியும்
6. தேகம் கருத்து காணும்
7. மாதவிடாயின் போது வயிறு வலிக்கும்
8. குழந்தை உருள்வதுபோல் பொருமல் உண்டாகும்
9. குருதி செந்நிறமாக நாற்றத்துடன் ஒழுகும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மருத்துவம்:

1. நாகை பட்டையை, மேதி (எருமை) மோரில் இடித்து ஓர் உழக்கு சாறு எடுத்து. அச்சாற்றுடன் 3 கழஞ்சு சந்தனம் கலந்து 3 நாள் இருவேளை குடிக்கவும்.
2. முருங்கைப்பூ அரைத்து (தேங்காய் அளவு) எடுத்து தேங்காய் பால், பசும்பால், வெல்லம் (2 பலம்) கலந்து தேசிக்காயளவு (எலுமிச்சம்பழமளவு) உண்ணவும்.

பித்த பெரும்பாடு - தீரும்

1. குருதியானது சூட்டுடன் மஞ்சள் நிறத்தில் வெளிப்படும்
2. உணவில் வெறுப்பு உண்டாகும்
3. யோனி, சூட்டில் வெந்து யோனிக் கசிவு ஏற்படுத்தும்
4. உடல் வெளுத்துக் காணும்
5. குருதியில் செவ்விலங்கள் குறையும், குருதி வற்றிக் காணும்
6. கால், கையில் காந்தல் உண்டாகும்
7. உடல் மெலியும்
8. குருதி கட்டியாய் ஒழுகும்
9. தேக உளைச்சல் இருக்கும்

மருத்துவம்:

1. ஆயில்யப்பட்டையை நீரில் ஊற வைத்து வடிகட்டி, அதனுடன் பச்சரிசி மாவு கலந்து அடையாக செய்து 3 நாள் இருவேளை உண்ணவும்.
2. உதியன்பட்டை, நாகல்பட்டை, அரசின் தோல், இலந்தைப்பட்டை, அத்திப்பட்டை, மாவின் பட்டை, கருவேப்பிலை பட்டை வகைக்கு ஒரு பலம் எடுத்து சூரணித்துக் கொள்ளவும். சூரணத்துடன் பச்சரிசி மாவு, பனைவெல்லம் கலந்து பிட்டு செய்து எருமை எண்ணெயுடன் சேர்த்து உண்ண வேண்டும்.

சிலேற்பன பெரும்பாடு - தீராதது

1. குருதி வெள்ளை நிறமாக ஒழுகும்
2. உடல் எரியும்.
3. தாகம் உண்டாகும்
4. படபடத்து மூச்சு வாங்கும்
5. இருமல் உண்டாகும்.
6. அடிக்கடி மயக்கம் உண்டாகும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மருத்துவம்:

1. 5 பலம் பூங்காவியை நீரில் கலந்து வைக்கவும். 3 நாள் கழித்து தெளிவிறுத்து அதனுடன் பொரிகாரம் சேர்த்து 3 நாள் இரு வேளை ஆழாக்கு உண்ண வேண்டும்.
2. புதிதாக வெந்த செங்கல்லை சூரணித்து வடிகட்ட வேண்டும். அதனுடன் சீனி கலந்து 6 நாள் இருவேளை கொடுக்கவும்.

திரிதோஷ பெரும்பாடு - தீராதது

1. குருதியானது கல்லு போல் கட்டியாகவும், கருப்பு, சிவப்பு மஞ்சள் போன்ற வித விதமான நிறத்தில் மாறிப்போகி வெளிப்படும்.
2. வயிறு உளையும்.
3. நாற்றம் உண்டாகும்.
4. தலைநடுக்கம் ஏற்படும்.
5. வாயில் நீர் ஊறும்.

மருத்துவம்:

மதுரம், கெந்தி வகைக்கு 3 கழஞ்சு எடுத்து ஆடாதோடைச் சாற்றுடன் அரைத்து, ஆவின் (பசு) நெய் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து உண்ணவும்.

பத்தியம்:

- புளி
